# ஸ்ரீக்ருஷ்ணாஷ்டகம்

**உரை: V.V. ராமாநுஜன்**

சென்ற இதழில் வெளிவந்த முகுந்தாஷ்டகம் போல ஸ்ரீக்ருஷ்ணாஷ்டாகமும் மிகத்தொன்மை வாய்ந்தது. புனிதமானது, புனிதமளிக்கவல்லது.

1. **வஸுதேவஸுதம் தேவம் கம்ஸசாணூரமர்த்தநம் |**
   **தேவகீபரமாநந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

வஸுதேவர் குமாரனும், தாயான தேவகிக்கு மிக்க ஆநந்தம் விளைவிப்பவனும், கம்ஸன் சாணூரன் முதலானாரை முடித்தவனும் ஜகத்குருவுமான ஸ்ரீக்ருஷ்ணனைத் தொழுகிறேன்.

வஸு-பெருநிதி; வஸுதேவன்- நிதி எடுத்தவன், நிதியையுடையவன். வஸுதேவனும் தேவகியும் தவமியற்றிப்பெற்ற ஒப்பில்லா நிதி க்ருஷ்ணன். பெற்ற உடனே இழந்து நீண்டகாலத்துக்குப்பின் மீண்டும் பெறும்படி இவர்கள் சரித்திரம் அமைந்தது. தேவதேவ ஸ்வரூபத்தைக் காட்டிக்கொண்டு வந்து பிறந்த க்ருஷ்ணனைக் கண்டு பெற்றோர் அடைந்த ஆநந்தத்தைப் பரமாநந்தம் என்று சொல்வது மிகையாகாது. **தேவம்**- *சாதுசனத்தை நலியும் கஞ்சனைச் சாதிப்பதற்கு ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்திங்குப்பிறந்த (திருவாய் 3-5-5) தேவதேவன். *விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும் வீழச்செற்றவன் (திருமொழி 2-3-1) சாணூரன்-கம்ஸன் பரிகரமான மல்லன். வேழம், பாகன், மல்லன் இவர்களை முடித்து இவர்களை ஏவிய தன் மாமன் கம்ஸனையும் முடித்தவன் க்ருஷ்ணன்.

**க்ருஷ்ணம்**- கரியான். கரியநிறமுடையவன். தேவகிக்கு மகனாய் அவதரித்தபோது இட்டபெயர் என்று ப்ரஸித்தம். க்ருஷ்ணன் என்பது எம்பெருமானின்பல திருநாமங்களில் முக்கியமானதொன்றாம். ஆனந்தத்துக்கிருப்பிடம்-ஸ்ருஷ்டயாதி லீலைகளால் ஆநந்தப்படுமவன். க்ருஷ்ணாவதாரத்தில் தன்னே ராயிறம் பிள்ளைகளுடன் விளையாடி மகிழந்தவன். பூமியை மகிழச்செய்பவன் என்று ஒரு பொருள் கூறுவர். *மண்ணின்

பாரம்நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான். (திருவாய் 9-1-10) பூமிக்கு பாரமவது கம்ஸன் சிசுபாலன் துர்யயோதனாதிகள் போன்ற தீய புத்தியுடையயோர். ✱நிலமங்கை துயர் தீர்த்துய்யப் பாரதத்துள் இவரித்தரசர் தடுமாற இருள்நாள் பிறந்தவம்மான (திருமொழி 8-8-9) (இவரித்த-எதிரிட்டு நின்ற). பூமிக்கு ரக்ஷகன் என்றதாயிற்று. கோவிந்த நாமத்தின் பொருளும் இதுவே.

ஜகத்குரும்-குரு-அஜ்ஞாநவிருளை அழிக்கும் ஆசாரியன். இன்னும் பல பொருள்களுண்டு. ஆதிகுருவாய் முதலில் அவதரித்தவன். ✱யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம் யோவை வேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை-எவன் பிரமனை முதலில் பிறப்பித்து அவனுக்கு வேதங்களை உபதேசித்து அவனால் உலகில் பரவச்செய்கிறானோ -என்கிறது. க்ருஷ்ணனது பாலலீலைகளில் முதலிடம் பெறுவது பூதனாவதம். ✱அவள் மார்பில் தடவிவந்த கொடிய விஷத்தை ✱விடப்பாலமுதா அமுது செய்திட்டமாயன் (திருவாய் 1-5-10). ''ஸ்தந்யம் தம் விஷஸம்மிஸ்ரம் ரஸ்யமாஸீத் ஜகத்குரோ:-'' (ஹரிவம்வம்) ✱விடநஞ்சமுலை சுவைத்த மிகுஞானச்சிறுகுழவி (திருவாய் 4-8-9). இவனே ✱அகல்ஞாலத் தவராறிய நெறியெல்லா மெடுத்துறைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தி (திருவாய் 4-8-6). அர்ஜுனனை வ்யாஜமாக வைத்து ஸகலோபநிஷத்ஸாரமான பகவத்கீதையை அகல்ஞாலத்தவரறிய எடுத்துரைத்தவன். இந்த நெறியில் ஸாரம் ''மாமேகம் ஶரணம் வ்ரஜ'' நீவரித்த ஆசாரியனாய் நெறியெல்லாம் எடுத்துரைக்கும் என்னைச்சரணம்பற்று. ஜகதாசாரியன் க்ருஷ்ணனே. வந்தே-ஸேவிக்கிறேன்- தொழுதெழுகிறேன்.

2. அத்ஸீபுஷ்ப ஸங்காஶம் ஹாரநூபுர ஶோபிதம் |
ரத்நகங்கணகேயூரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||

பூவைப்பூ வண்ணனாய் கருநீலதிருமேனியில் உசிதஸ்தானங்களில் அழகிய திருவாபரணங்களை அணிந்து விளங்கும் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும். திருவடிகளில் நூபுரம்-தண்டை (சிலம்பு) சலங்கை போன்றவை. திருமார்பில் வனமாலை முத்துஸரங்கள், சங்கிலி, ரத்நஹாரங்கள் முதலியவை. திருக்கைகளில் ரத்னங்க ளிழைத்த கைவளைகள்; தோள்வளைகள். ''சோபிதம்'' திருவா பரணங்களால் இவன் சோபிக்கிறானோ? (விளக்கமடை கிறானோ?) இவன் திருமேனியில் உள்ளமையால் அவைப்ரகாச மடை

கின்றனவா? எனில், ''இவனே ஆபரணங்களுக்கழ கூட்டுமவன்'' என்றே சொல்லவேண்டும். திருமேனிக்குப் பரபாகரஸாவஹமாய் அமைந்தவை ஆபரணங்கள். எம்பெருமான் அணியும் திருவா பரணங்களை ''கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸகௌஸ்துப முக்தாதாம உதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராதி அபரிமித திவ்யபூஷண'' என்று விரிவாக அருளிச்செய்துள்ளமை (சரணாகதி கத்யம்) காணலாம். இவை ''நிரதிசய ஸுகந்த-நிரதிசய ஸுகஸ்பர்ஶ- நிரதிசய ஔஜ்ஜ்வல்ய'' என்று விசேஷிக்கப்படுகின்றன. பரிமளம் மிக்கவை யாகவும் திருமேனியில் உறுத்தாதபடி ம்ருதுவாகவும், ப்ரகாசமாகவும் உள்ளவை இத்திருவாபரணங்கள்.

3. **குடிலாலக ஸம்யுக்தம் பூர்ணசந்த்ர நிபாநநம் |**
**விலஸத்குண்டலதரம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

சுருண்டுவிளங்கும் அழகிய குழல்களை (கூந்தல்) உடையவனும் முழுமதியையொத்த திருமுகமண்டலமுடையவனும் திருச்செவி களில் ஒளி வீசும் மகரகுண்டலங்களை யணிந்தவனுமான க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

4. **மந்தாரகந்தஸம்யுக்தம் சாருஹாஸம் சதுர்புஜம் |**
**பர்ஹிபிஞ்சாவ சூடாங்கம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

மந்தாரமலரின் பரிமளம் (தன்திருமேனியில்) வீசுபவனும், அழகிய புன்முறுவல் பூத்தவனும், நான்கு திருத்தோள்களையுடையவனும், திருமுடியில் மயில் பீலியைத் திருவாபரணமாகத் தரித்தவனுமான க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

மந்தாரமலர் தெய்வீகமணமுடையது. இச்சாக்ருஹீத அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹமாகையால் (தன் ஸங்கல்பமடியாகக் கொணர்ந்த விண்ணாட்டி லுள்ள திருமேனி) இனிய மணம் திருமேனிக்கு இயல்பானது. ✱நின்முகவொளிதிகழ முறுவல் செய்து (திருவாய் 6.2.9) என்கிறபடி பெண்களைத் தன்வசப்படுத்து முபாயம் யாவரையுமே மகிழ்விக்கும். **சதுர்புஜம்**– ராமக்ருஷ்ணாதி மநுஷ்யாவதாரங்களில் சதுர்பூஜம் உண்டா? எனில் உண்டு என்பதே உண்மை. பிறந்தபோது இருந்த ரூபமிறே. ''உபஸம்ஸர- ரூபமேதத் சதுர்புஜம்'' என்று பெற்றோர் வேண்டியபடி (நியமித்தபடி என்னவுமாம்) மறைத்து வைத்தான். கண்ணன் ''அப்பூச்சி'' காட்டித் தன்பாலஸகாக்களை அச்சுறுத்துவது திருவாழி சங்கம் தரித்த நான்கு

கையனாகக்காட்டி என்று வ்யாக்யானம். (மெச்சூதுச மிடத்தான்-பெரியா-2-1-1). கீதை விஶ்வரூபாத்யாயத் விச்வரூபங்கண்டு பயந்த அர்ஜுனன் வேண்டுவது: (11-46)

**"கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்த மிச்சாமி த்வாம்**
**த்ரஷ்டுமஹம் த்ததைவ |**
**தேநைவரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ**
**பவ விஶ்வமூர்த்தே||**

பயங்கரமான ஆயிரங்கை யுடைய இந்த விஶ்வரூபத்தை மறை திருவாழி முதலான திவ்யாயுதம் தரித்த சதுர்புஜனாகவே வேணும். ஆஶ்ரிதர்க்கு உகந்துகாட்டும் ஸௌம்யரூபம் இது *நான்குதோளன்-ஒண்சங்கதைவாளாழியான் ஒருவன் அடி னுள்ளானே (திருவாய் 8-8-1)

5. **உத்புல்ல பத்மபத்ராக்ஷம் நீலஜீமூத ஸந்நிபம் |**
**யாதவாநாம் ஶிரோரத்நம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்**

அப்போதலர்ந்த தாமரை இதழையொத்த அகன்ற திருக்கண்கள் யுடையவனும், நீருண்டகார்மேகம்போல் அழகிய திருமேனியுடை யவனும் யாதவகுலத்துக்கு ஶிகாமணி போன்றவனுமான க்ருஷ்ண வந்தே ஜகத்குரும்.

ஆழ்ந்தநீரில் உண்டான உருண்டதண்டின் நுனியி தாமரைமலர் காலை சூரியனது கிரணங்களால் அலர்த்தப்பட் மலர்ந்ததன் செவ்விய அகன்ற இதழையொத்த கண்கள் யுடையவன் - புண்டரீகாக்ஷன். "பத்மபத்ராக்ஷம்"- தாமரைமலரி போன்ற விசாலமான கண்கள். எம்பெருமானின் பரத்வத்தை நிரூபிக்கும் அடையாளம். *ஆயர்குலத்தை வீடுய்யத்தோன்றி கருமாணிக்கச் சுடர்! (திருவாய் 6-2-10) என்பது இவன் பிறந் யாதவக்குடிக்குமொக்கும்.

6. **ருக்மிணீ கேளிஸம்யுக்தம் பீதாம்பர ஸுஶோபிதம் |**
**அவாப்த துளஸீகந்தம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

திருவரையில் சாத்திய பீதாம்பரத்தினால் (பட்டுவஸ்த்ரம் விளங்குமவனும் ப்ரியமஹிஷியான ருக்மிணீதேவியுடன் கேளி கைகளில் (சொக்கட்டான் போன்ற விளையாட்டு) ஈடுபட்டவனு திருத்துழாயின் நறுமணம் கமழும் திருமேனியுடை யவனுமான க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

✱பெருமானரையில் பீதகவண்ணவாடைகொண்டு என்னை வாட்டம் தணியூ வீசிரே (நாச்.திரு. 13-1); பீதவாடையுடைதாழ வீதியார வருவான் (14-7); ✱பிதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து (பெரியா. 5-2-8) என்றெல்லாம் பேசும்படி திருவரையில் விளங்கும் பட்டுவஸ்த்ரம். திருத்துழாய் மணம் எம்பெருமானுக்கு இயற்கையானது. ✱பாலனாய் ஏழுலகுண்டு-ஆலிலை அன்னவசம் செய்யுமண்ணலார் தாளிணைமேலணி தண்ணந்துழாய் (திருவாய் 4-2-1) என்று ப்ரளயார்ணவத்தில் தனியனாய் ஆலினிலை மேலிருப்பிலும் தாளிணைமேலணி தண்ணந்துழாய் இருப்பதாகவே ஆழ்வார் காண்பது. ✱தோளிணை மேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்ததண்ணந்துழா யுடையம்மான் (திருவாய் 1-9-7) என்று நறுந்துழாயால் எப்போதும் அலங்கரிக்கப் பெற்றவன்.

க்ருஷ்ணாவதாரத்தில் பெரியபிராட்டியார் ருக்மிணியாக வந்தவதரித்து கண்ணனை மணந்தது ப்ரஸித்தசரிதம். வாய்த்த போதெல்லாம் பல விளையாட்டுகளில் ஈடுபட்டு இப்பிராட்டியை மகிழ்விப்பன். த்ரௌபதி பேராபத்தில் சிக்கி ''ஹாக்ருஷ்ணா! கோவிந்தா!'' என்று கதறியழுதபோது ருக்மிணீகேளிஸம்யுக்தனாக விருந்தவனை கௌரவஸபைக்கு நேரில் செல்லாமல் தேவி தடுத்து விட்டதாக சரித்திரம். ஸங்கல்பமாத்ரத்தினால் மானஸம்ரக்ஷணம் பண்ணி ரக்ஷித்துவிட்டான்.

**7. கோபிகாநாம் குசத்வந்த்வ குங்குமாங்கித வக்ஷஸம் |**
**ஸ்ரீநிகேதம் மஹேஷ்வாஸம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

இளவாயர் மாதரின் மார்பகத்துக் குங்குமக்குழம்பு தன்மார்பில் படிந்த அடையாளமுள்ளவனும், ஸ்ரீதேவிக்கு (மஹாலக்ஷ்மிக்கு) இருப் பிடமானவனும் வில்லாளிகளில் சிறந்தவனுமான க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

✱கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்பா! (திருப்பாவை 19) என்பது மற்ற இளவாயர் மகளிரிடமும் ஒக்கும். விஷ்ணோஸ் ஸ்ரீரநபாயிநி-பிராட்டியுடன் பிரியாத சேர்க்கை ''ஸ்ரீநிகேதம்'' என்பதால் பேசப்பட்டது. ராமாவதாரத்தில் போலே க்ருஷ்ணாவதாரத்திலும் பகவான் சிறந்த வில்லாளனாக விளங்கினான். ✱விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் (திருமொழி 2-3-1) என்று ஆழ்வார் கண்ணன் கம்ஸனின் பெரியவில்லை அநாயாஸமாக முறித்ததைப் பேசுகிறார்.

8. **ஸ்ரீவத்ஸாங்கம் மஹோரஸ்கம் வநமாலா விராஜிதம் |**
**சங்கசக்ரதரம் தேவம் க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ||**

தனது அகன்ற திருமார்பில் ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவை அடையாள மாக உடையவனும், வனமாலை எனும் திருவாபரணத்தால் விளங்குபவனும், திருவாழி திருச்சங்களையும் தரித்த தேவனை (பரமபுருஷனை)-க்ருஷ்ணம் வந்தே ஜகத்குரும்.

எம்பெருமானின் அகன்ற திருமார்பு 'ஸ்ரீவத்ஸம்' என்று ப்ரகாசமான திருமறுவால் அழகு செய்யப்படுகிறது. *திரு ஆரமார்வதன்றோ அடியேனை ஆட்கொண்டதே (அமலனாதி-5). *அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா! (திருவாய் 6-10-10) என்று பிராட்டிக்கு ப்ரியமான இருப்பிடம். பல திருவாபரணங்களுடன் மிகச்சிறந்த ஆபரணமான வனமாலையும் திருமார்பில் ப்ரகாசிக்கிறது. இவன் கைக்கொள்ளும் திவ்யாயுதங்கள் இவனுக்கு மேலும் அழகூட்டுகின்றன. *கைகழலாநேமியான்; கைகழலாவெண்சங்கத்தான் என்னும்படி இரண்டைச்சொன்னது மற்றவையையும் சொன்னதாகக் கொள்க.

9. **க்ருஷ்ணாஷ்டகமிதம் புண்யம் ப்ராதுருத்தாய யஃபடேத் |**
**கோடிஜந்மக்ருதம் பாபம் ஸ்மரணேன விநஸ்யதி ||**

துதிப்பவர்க்குப் பலனுரைக்கிறது. ஸ்ரீக்ருஷ்ணாஷ்டகம் என்ற இச்சிறந்த புண்ணியத்துதியை காலையில் (சிற்றஞ்சிறுகாலே) எழுந்து அநுஸந்திப்பவனுக்கு எண்ணற்ற பிறவிகளில் செய்து சேமித்துள்ளபாபங்கள் ஒரு நொடியில் ''தீயினில் தூசாகும்''.